# விநாயகப்பா



வி. கந்தவனம்

காந்தளகம்

# விநாயகப்பா

## வி. கந்தவனம்


காந்தளகம்

4, இரகேசா வளாகம்
834, அண்ணா சாலை
சென்னை - 600 002

மறவன்புலவு
சாவகச்சேரி

முதற் பதிப்பு : தி.பி. 2024
ஸ்ரீமுக கார்த்திகை
1993

உரிமை : ஆசிரியர்க்கு

விலை : இந்தியாவில் : ரூ. 7-50
இலங்கையில் : ரூ. [illegible]

அச்சிட்டோர் : அலமு அச்சகம்
சென்னை-600 014.

# பதிப்புரை

ஈழத்து யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மராட்சியின் தலை நகர் சாவகச்சேரி. சாவகச்சேரியைச் சார்ந்த நுணாவிலம்பதியிற் பிறந்தவர் கவிஞர் வி. கந்தவனம் அவர்கள். நுணாவில் மேற்கில் உள்ள கொல்லாபுரியாந் திருத்தலத்தில் எழுந்தருளி வெவ்வினை தீர்த்துவரும் வீரகத்தி விநாயகப் பெருமான் மீது கந்தவனம் அவர்கள் அவ்வப்போது பாடிக் களித்த பத்திப் பாடல்களை, ' விநாயகப்பா ' வின் முதலாம் பாகமாக வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

கொல்லாபுரித் தலத்தைக் கவிஞர் தமது பாடல்களில் ' கோலங்கரை ' எனக் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத் தக்கது. பரந்து விரிந்த மருத நில மருங்கில் அமைந்துள்ள அழகிய தாமரைத் தடாகத்தின் கரையோரத்தில் விநாயகப் பெருமான் அமர்ந்தருளும் தனிச்சிறப்பு இப் பெயரால் இனிது வெளிப்படுகின்றது.

விநாயகப் பாக்களைக் கனடாவில் வெளிவரும் 'ஆத்ம ஜோதி', ' பொதிகை ' ஆகிய சஞ்சிகைகளில் படிக்க நேர்ந்த அன்பர்கள் பலர் பாராட்டி வரவேற்றிருக்கின்றார்கள். அவர்களில் முதன்மை யானவர் இலக்கிய வித்தகர் கலாநிதி க. செ. நடராசா அவர்கள். பாராட்டியவரிடமே முன்னுரையைப் பெற்றிருக்கின்றார் நூலாசிரியர். இருவருமே ஈழநாட்டின் பெயர் பெற்ற கவிஞர்கள். கவிஞன் திறத்தைக் கவிஞனே அறிவான். விநாயகப் பாக்களின் அருமை பெருமைகளை மிக அழகாகத் தமது முன்னுரையில் விளக்கி இருக்கின்றார் கலாநிதி க. செ. நடராசா அவர்கள்.

' விநாயகப்பா'வின் இரண்டாம் பாகமாக விநாயகப் பெருமான் அருள் பாலிக்கும் பிற தலங்கள் மீது கவிஞர் அவர்கள் பாடிய பதிகங்களைத் தொகுக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அனுபவமும் ஆள்பொருளும் சுவைநலமும் இறையருளும் கூடிக் கலக்கும் இப் பத்தி இலக்கியத் தொகுதியைப் பாடிக் களிப்போர் பக்குவம் பெற்றுப் பரம் பொருள் விளக்கம் எய்துவார் என்பதில் ஐயமில்லை.

இந்நூலின் பிழைதிருத்தம் செய்த புலவர் வெற்றியழகன் அவர்களுக்கும், இந்நூலை அச்சியற்றப் பல்லாற்றானும் உதவிபுரிந்த அனைவர்க்கும் எங்களது நன்றி என்றும் உரித்தாகுக.

இத் தொகுதியை வெளியிடும் வாய்ப்பினை எமக்கு அருளிய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் பாதாரவிந்தங்களுக்கே இதனைப் பத்தியுடன் சமர்ப்பிக்கின்றோம்.

மறவன்புலவு, சாவகச்சேரி. **க. சச்சிதானந்தன்**

*25–12–1993*

இலக்கிய வித்தகர் கலாநிதி

**க. செ. நடராசா**

அவர்கள் வழங்கிய

# முன்னுரை

யாழ்ப்பாணத்துத் தென்மராட்சி ஊர்களுள் ஒன்றாய நுணா விலிலே எழுந்தருளியிருக்கும் திருக்கோலங்கரை வீரகத்திப் பிள்ளை யார் மீது கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் விநாயகப்பா எனப் பன்னிரு பதிகங்கள் பாடியுள்ளார். புலமைமிக்க இந்நூலாசிரியர் வாசகர்களுக்குப் புதியவரல்லர். வானொலி மூலமாகவும், பத்தி ரிகைகள் மூலமாகவும், கவியரங்குகள் மூலமாகவும் பற்பல கவிதை களை அவ்வப்போது வெளியிட்டு மக்களின் ஆதரவைப் பெற்றவர். இவர் ஆசிரியத் துறையில் முற்றிக் கல்லூரி அதிபராகக் கடமை யாற்றி வாழ்க்கை அனுபவங்களை நிறையப் பெற்றதனாற் பரந்த ஞானம் படைத்தவர். அதனால், இவர் கவிதைகள் இலௌகீகப் பொருள்களுடன் நின்றுவிடாது பரஞானப் பொருள் கொண்டன வாகவும் மிளிர்கின்றன. கவிஞர் கந்தவனம் விநாயகப்பா என்ற இப்பதிகம் எழுதுவதற்கு முன் முறிகண்டிப்பதி வீரகத்தி விநாயகர் ஊஞ்சல், குரும்பசிட்டி விநாயகர் பத்து, நல்லூர் நாற்பது, புன்னை யம் பதிகம் என்ற பக்திப் பாடல்களையும் பாடியுள்ளார்.

நுணாவிலிலே பிறந்து வளர்ந்தமையாற் கந்தவனக் கவிஞர் இளமையிலே வந்தனை செய்து வந்த அவ்வூர்க் கோலங்கரைப் பிள்ளையார்மீது நாளடைவில் அவருக்கு நிறைந்த பக்தி உறைந்தது. அதனால் அவர் பாடியுள்ள இவ்விநாயகப் பாவின் பதிகங்களைப் படிக்கும்போது, பாராயணஞ் செய்யத் தக்க பக்திப் பாடல்களாகவே மனத்திற் பதிகின்றன. இந் நூலின் முதற் செய்யுட் பகுதியாய

‘ ஒருமுகமும் இருசெவியும் மூன்று கண்ணும்
நான்குதோ ளுடனைந்து கரமு முள்ளார்
திரிதரநல் நிழல்சொரியும் நுணாவில் சேர்ந்த
திருக்கோலங் கரைச்சோலை திகழ்வார் தாமே ’

என்ற அடிகளைப் படிக்குந்தோறும் திருநாவுக்கரசு நாயனார் திருத் தாண்டகத்தின் சாயல் மனக்கண்முன் படர்ந்து வருகிறது. அது போலவே ' அருள் நினைந்துருகல் ' என்ற பதிகப் பாடல்கள், இயற்கை எழில் நிறைந்த திருஞான சம்பந்தர் பதிகங்களை நினைவுக்குக் கொண்டுவருகின்றன.

உதாரணமாக,

' கன்னித் தமிழின் கவினார் உயர்வைக்
காணும் படிசெய்தாய்
கன்னற் கவிதைக் கலையை அருளிக்
கவிஞர் அரங்கேற்றிப்
பின்னுக் கிருந்தே முன்னுக் குயரத்
தள்ளிப் பெயர்தந்தாய்
வன்னக் கிளிகள் குலவுங் கோலங்
கரைவாழ் பெருமானே '

என்ற இப்புலவன் பாடலைப் படித்ததும், திருஞான சம்பந்த நாயனார் பாடியுள்ள

' மஞ்சட் போழ்ந்த மதியஞ் சூடும்
வானோர்ப் பெருமானார்
நஞ்சைக் கண்டத் தடக்கு மதுவும்
நன்மைப் பொருள்போலும்
வெஞ்சொற் பேசும் வேடர் மடவார்
இதநா மதுவேறி
அஞ்சொற் கிளிகள் ஆஓ என்னும்
அண்ணா மலையாரே.

என்ற பாடல் மனத்திரையில் ஆடி வருகிறது. மேலும் சொல்வதானால், இதன் இறுதிப் பதிகமாய ' குருஞானப் புலம்பல் ' மாணிக்கவாசகரின் சிவபுராணத்தை ஞாபகப்படுத்திவிடுகிறது.

எனவே விநாயகப்பா என்ற இப் பக்தி நூற்செய்யுட்களைப் பக்தி மார்க்க காலப் பான்மையிலே அமைத்துத் தந்திருக்கிறார் கவிஞர் கந்தவனம் என்று கூறலாம். அதனால் இப்பதிகங்கள் பாராயணத் துக்குரியனவாகவுங் கொள்ளலாம்.

புலவர் சிறு வயதிலேயே தாய் தந்தையரை இழந்து உறவின ரால் வளர்க்கப்பட்டவராகையால், உற்றார் உறவினர் நண்பர்கள் அன்பர்கள் ஆசிரியர்கள் சமயக்குரு ஆகியோர் தனக்களித்த அனு சரணைகள் ஆசிகள் அனைத்தும் அந்த விநாயகனால் அவர்கள் மூலம் வழங்கப்பட்டனவே என்று உருவகித்துப் பாடப்பட்டிருக்கும் அடிகள், இப்புலவனின் நன்றியுணர்வையும் ஞான வளத்தையும் காட்டுவனவோடமையாது, இறைவனே எல்லா உயிர்களோடும் உடனுறைந்து உலகை இயக்கி வருகின்றான் என்ற உண்மையை யும் உணர்த்தி நிற்கின்றன.

விநாயகப்பாவிலே தான் பிறந்த ஊராய நுணாவிலின் பல் வேறு வளங்களையும் ‘திறமான வயல்’ செறிந்த நுணாவில் என்றும், ‘தெள்ளமுதக் கனிமலிந்த நுணாவில்’ என்றும், ‘தேடரிய சிவக்குருமார் நுணாவில்’ என்றும், ‘திங்களெழ ஆம்ப லெழும் நுணாவில்’ என்றும், ‘சேயிழைவாய் கிளி நோக்கும் நுணாவில்’ என்றும், ‘தென்னை பனை நிறைந்த வள நுணாவில்’ என்றும் இலக்கிய நயம்பட இயம்பிய புலவன், விநாயகர் சம்பந்த மான புராணக் குறிப்புக்களையும் விநாயக தத்துவப் பொருளை யும் விளக்கத் தவறவில்லை. விநாயகர் அவதாரம் முதல், வள்ளி திருமணத்தில் முருகனுக்குதவிய கதை, காகமாய் அகத்தியர் கமண்டலங் கவிழ்த்த கதை, கயமுகன் வதம், ஔவையைக் காவியக் கயிலை சேர்த்தமை, திருமாலுற்ற உருமாற அருள் செய்தமை, தாய் தந்தையரே உலகமென உணர்த்தி மாங்கனி பெற்றமை, சிவன் முப்புரமெரிக்கச் சென்ற தேரை யிருத்தி வைத்தமை போன்ற பல கதைகளையும் தொட்டுக்காட்டி யாத்துள்ள பதிகங்களிலே,

‘ மன்னியெழும் ஊழிவர வயிற்றில் எல்லா
வகைப்பொருளும் வைத்திடும்ஓம் வடிவ மானார் ’

என்றும்,

‘ உயர்வினை அளிப்பான் உன்னைவிட் டகலான்
உத்தமன் ஓம்முக ஐயன் ’

என்றும்,

‘ உலகெலாம் உண்டவனே ஓம்பொருளாய் நின்றவனே.

என்றும் கூறிப்

‘ பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரண அற்புத மலர்தலைக் கணிவாம் ’

என்ற பழம் பாடற்கமைய ‘ ஓம் ’ என்ற பிரணவப் பொருளின் வடிவமே விநாயக உருவம் என்ற உண்மையையும் வெளிப்படுத்தி யுள்ளார்.

இத்தகைய கவினுறு கவிதைகளைப் பன்னிரு பதிகமாகப் பாடி விநாயகப்பா தந்த கவிஞர் வி. கந்தவனம் தமிழுக்கு மட்டு மன்றிச் சைவத்துக்கும் பெருந்தொண்டாற்றியிருக்கிறார். தல புராணங்கள் பாடுவோர் இன்றருகிப் போகத் தலப் பதிகம் பாட முற்பட்ட இப்புலவன் பனுவல்கள் படிப்போருக்குச் சான்ற ஆன்ம ஞான உணர்வையும், ஆன்ற தமிழ் அழகையும், ஊன்றிய நாட்டுப் பற்றையும் உணர்த்த வல்லனவாம். இவற்றைப் பலரும் படித்துப் பக்தி இலக்கியச் சுவையைப் பருகலாம்.

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | வளர்ப்புப் பதிகம் | — | 10 |
| 2. | விளக்கப் பதிகம் | — | 14 |
| 3. | அருள் நினைந்துருகல் | — | 18 |
| 4. | திருவழைப்பு | — | 22 |
| 5. | இடித்துரைப் பதிகம் | — | 24 |
| 6. | மலர்த்தாட் பணிவு | — | 28 |
| 7. | திருவணக்கம் | — | 30 |
| 8. | திருத்தாளடைவு | — | 32 |
| 9. | பூங்கழலணிவு | — | 34 |
| 10. | பூசனைப் பதிகம் | — | 36 |
| 11. | திருவுலா வெழுச்சி | — | 40 |
| 12. | குருஞானப் புலம்பல் | — | 44 |

# 1. வளர்ப்புப் பதிகம்

அரியவொரு பேரொளியாய் அமைந்த ருள்வார்
அன்னையுமாய்த் தந்தையுமாய் அன்பு செய்வார்
உரியதுணை உடன்பிறப்பாய் உருகி நிற்பார்
உடனிருந்து தேவையறிந் துதவி செய்வார்
ஒருமுகமும் இருசெவியும் மூன்று கண்ணும்
நான்குதோ ளுடனைந்து கரமு முள்ளார்
திரிதரநல் நிழல்சொரியும் நுணாவில் சேர்ந்த
திருக்கோலங் கரைச்சோலை திகழ்வார் தாமே. (1)

அறியாத பருவமதில் அழைத்துச் சென்றார்
அருகிருத்தி அமுதிருத்தி அருள்பொ ழிந்தார்
வறிதான மனவயலை உழுது நன்கு
வளப்படுத்தி விதைத்துமிக வளரச் செய்தார்
வெறிவாதக் கயமுகனை வீழ்த்தும் வண்ணம்
மிக்குயர்தன் கொம்பொடித்த விறல்ப டைத்தார்
திறமான வயல்செறிந்த நுணாவில் சேர்ந்த
திருக்கோலங் கரைச்சோலை திகழ்வார் தாமே. (2)

வீட்டைவிட்டு நண்பருடன் வெளியிற் சுற்றி
விளையாடித் திரிந்தவெனில் விருப்பு வைத்தார்
காட்டுமிடுக் கிளங்கன்றைப் பிடித்துக் கட்டிக்
கதிகுறைத்து மதியளித்துக் காவல் காத்தார்
நாட்டரிய திறன்படைத்த நான்மு கன்றன்
நலனிழந்து நலிகையிலே நன்மை செய்தார்
தேட்டமுறு மந்தைமிகு நுணாவில் சேர்ந்த
திருக்கோலங் கரைச்சோலை திகழ்வார் தாமே. (3)

பள்ளியெனப் புறப்பட்டே ஈச்சம் பற்றை
பதுங்கிமுள் குற்றுபழம் பறிக்கப் பார்த்தார்
எள்ளிநகை புரிந்திரங்கி இடையில் ஓர்நாள்
இணையற்ற கனிகாட்டி ஈர்த்துக் கொண்டார்
உள்ளிநிதம் பூசித்த திருமால் உற்ற
வுருமாற வருள்செய்த உலக நாதர்
தெள்ளமுதக் கனிமலிந்த நுணாவில் சேர்ந்த
திருக்கோலங் கரைச்சோலை திகழ்வார் தாமே. (4)

பாடங்களை முறையாகப் படித்தி டாது
பலகோணக் குறுக்குவழி பதுங்கி னேனைக்
கூடிவழி வந்தொருநாள் கூட்டிக் கோயில்
கொண்டுசென்று படிப்பித்த குருவு மானார்
ஈடிணையிற் றந்தைபுரம் எரிப்ப தற்கென்
றெழுந்தபெருந் தேரதனை யிருத்தி வைத்தார்
தேடரிய சிவக்குருமார் நுணாவில் சேர்ந்த
திருக்கோலங் கரைச்சோலை திகழ்வார் தாமே. (5)

அங்கொருகால் இங்கொருகால் வைத்த லைந்தேன்
ஆனவழி தெரியாது மிகம லைந்தேன்
செங்கதிரோன் போன்றதிரு மேனி காட்டிச்
செயலிழக்கச் செய்துமனை கூட்டிச் சென்றார்
எங்குமுள பெற்றவர்தாம் உலக மென்றே
ஏத்திவலம் வந்துகனி இனிது பெற்றார்
திங்களெழ வாம்பலெழும் நுணாவில் சேர்ந்த
திருக்கோலங் கரைச்சோலை திகழ்வார் தாமே. (6)

திருக்குளத்தில் தாமரைத்தண் டிடையில் சிக்கித்
திகைத்தவெனை முதலைதெரிந் திழுக்க முன்னர்
பொருக்கெனவே புகுந்துதவி புரிந்து காத்தார்
புறம்புறமே திரிந்தறிவு புகட்டி யீர்த்தார்
உருக்குமெழில் வள்ளியுளம் உணர்ந்து வந்தே
உற்றபெருந் தம்பியுடன் ஒன்று சேர்த்தார்
செருக்கிலருஞ் செம்மனத்தார் நுணாவில் சேர்ந்த
திருக்கோலங் கரைச்சோலை திகழ்வார் தாமே. (7)

கோயிலிலே குளிக்கவைத்தார் பூசை காட்டிக்
குளிரவைத்துக் கும்பிடவும் பழக்கி விட்டார்
கோயிலிலே போதனைகள் கொடுத்து நின்றார்
குணநலமும் பொறுப்புணர்வும் கூட வைத்தார்
ஆயபெரும் அகத்தியருக் கன்பு காட்ட
அரியவொரு காகமென வணுகி வந்தார்
சேயிழைவாய் கிளிநோக்கும் நுணாவில் சேர்ந்த
திருக்கோலங் கரைச்சோலை திகழ்வார் தாமே. (8)

பாதகர்கள் பக்கமணு காமல் பார்த்தார்
பண்புகெட நடவாது பரிந்து காத்தார்
ஏதமிலாக் கல்விபெற வழியெ டுத்தார்
இல்லறத்தை இன்புடனே இயற்ற வைத்தார்
காதலுடன் ஔவையினைக் கரத்தாற் காவி
கயிலைமலை சேர்த்தபெருங் கருணை யாளன்
தீதகன்ற திருவுடைய நுணாவில் சேர்ந்த
திருக்கோலங் கரைச்சோலை திகழ்வார் தாமே. (9)

சென்னியிலே கரங்குவித்துச் சிந்தை செய்து
சிலிர்த்துருகி நீர்பெருகத் திகைப்ப தல்லால்
என்னவிதம் இவர்கருணை எடுத்துச் சொல்வேன்
ஏற்றவரும் பெருந்துணையாய் எனக்கு வாய்த்தார்
மன்னியெழும் ஊழிவர வயிற்றில் எல்லா
வகைப்பொருளும் வைத்திடுமோம் வடிவ மானார்
தென்னைபனை நிறைந்தவள நுணாவில் சேர்ந்த
திருக்கோலங் கரைச்சோலை திகழ்வார் தாமே. (10)

# 2. விளக்கப் பதிகம்

கயமுகனின் கடுமைமிக வமரர் வேறு
கதியின்றி யரனிடத்திற் கலங்கி வேண்டத்
தயவுமிகு தலைவருமை தன்னை நோக்கத்
தந்தையியல் பத்தனையும் தாங்கி வந்து
கயமுகமும் கண்ணுதலுங் கரங்கள் நான்குங்
கவினுருவம் பெற்றுதித்த கணநா தர்தாம்
வியன்பொழில்சூழ் திருக்கோலங் கரையில் மேவும்
வீரகத்திப் பிள்ளையென விளங்கக் கண்டேன். (1)

செருப்பறையோ டெத்திசையுஞ் செறியச் சேர்ந்த
திடப்படைகொள் திறமைமிகு சேனை சூழச்
சிரிப்புடனே படைதரியாச் சிறியோ னென்று
செருக்குடனே யெதிர்நின்ற தீயோன் மாள
மருப்பெறிந்து வானவர்க்கு வாழ்க்கை யீந்த
வல்லபெரு விக்னேசு வரர்தாம் மிக்க
விருப்புடனே திருக்கோலங் கரையில் மேவும்
வீரகத்திப் பிள்ளையென விளங்கக் கண்டேன். (2)

தன்னிகரிற் சூரியருஞ் சாரும் கோளுஞ்
சந்திரரு மண்டசரா சரங்கள் யாவும்
மன்னுயிரும் வகையுடலும் வாழ்க்கைக் கேற்ற
வளநலனும் மனத்தினிலே நினைத்த வாறு
நன்னயமாய்ப் படைத்தினிது நாட்ட வல்ல
நான்முகனை நாணவைத்த நாய கர்தாம்
மென்னெழிலார் திருக்கோலங் கரையில் மேவும்
வீரகத்திப் பிள்ளையென விளங்கக் கண்டேன். (3)

கரியநிறக் கவினழகர் கவர்ச்சி யாளர்
கலைச்சங்குஞ் சக்கரமுங் கரங்கொள் சீலர்
அரியதிரு மகளமரு மன்ப கத்தார்
அவதார மெடுத்தடியா ரல்லல் தீர்ப்பார்
மருகர்திரு முருகனெனும் பெருமை மிக்கார்
மாலவருக் கருள்புரிந்த வார ணர்தாம்
விரியுவெளித் திருக்கோலங் கரையில் மேவும்
வீரகத்திப் பிள்ளையென விளங்கக் கண்டேன். (4)

ஆதியிலார் அந்தமிலார் அறிவே யானார்
அருள்வடிவும் பொருள்முடிபும் அவரே யானார்
ஏதமிலார் பாதியுரு மாது வானார்
இடுகாட்டி லெழிற்பாத மெடுத்து நிற்பார்
தீதுபுரி யசுரர்களைத் தீய்க்கச் சென்ற
தேரொடித்த பேர்படைத்த செயற்பிள் ளைதாம்
வேதமொலி திருக்கோலங் கரையில் மேவும்
வீரகத்திப் பிள்ளையென விளங்கக் கண்டேன். (5)

வேலவனார் வெற்றிமயி லிவர்ந்து மிக்க
வேகமுடன் வியனுலகை விரைந்து சுற்ற
ஞாலமெலா மம்மையப்ப ரென்று நாட்ட
நண்ணிவலம் வந்துகனி பெற்று ஞானக்
கோலமுறு தம்பியையோ ராண்டிக் கோலங்
கொள்ளவைத்துக் குறும்பிழைத்த கொற்ற வர்தாம்
மேலவர்வாழ் திருக்கோலங் கரையில் மேவும்
வீரகத்திப் பிள்ளையென விளங்கக் கண்டேன். (6)

கேடுபுரி மோடசுருடல் கீறு மன்பன்
    கெஞ்சியுரை தந்தைசிவன் கேட்கு மைந்தன்
ஆடுமயி லோடுவிளை யாடு மையன்
    ஆறுபடை வீடுடைய வாண்டி யப்பன்
கோடியெழில் வள்ளியுடன் கூடி வாழக்
    கொடுத்தருளு வந்தகுணக் கூர்ஞா னர்தாம்
வீடுதரு திருக்கோலங் கரையில் மேவும்
    வீரகத்திப் பிள்ளையென விளங்கக் கண்டேன். (7)

நந்தமிழைப் பைந்தமிழாய் நயங்கள் மிக்க
    நவமொழியா யுயர்மொழியா யுலகம் நாடுஞ்
செந்தமிழாய்ச் சிறப்புறவே வளர்த்த தேவர்
    தென்பொதிய மலையிருந்த தெய்வ ஞானி
அந்தமிலா வரமுடையோ ரமர ரேத்து
    மகத்தியருக் கருள்புரிந்த வண்ண லார்தாம்
விந்தைநலத் திருக்கோலங் கரையில் மேவும்
    வீரகத்திப் பிள்ளையென விளங்கக் கண்டேன். (8)

திரிந்துமனம் போனவழி செல்லா வண்ணம்
    திருத்தமுறு வாழ்க்கைதனை மாந்தர் செய்ய
மருந்துபல சொரிந்துநல வாக்கு நூல்கள்
    வகுத்தினிது படைத்திடவும் சேர மான்முன்
அருந்தவத்துக் கயிலையடைந் திடவும் ஔவைக்
    கருள்புரிந்த வைங்கரத்துப் பிள்ளை யாரே
விருந்துமகிழ் திருக்கோலங் கரையில் மேவும்
    வீரகத்திப் பிள்ளையென விளங்கக் கண்டேன். (9)

ஊழியுற வுள்ளவெளி யண்ட மூரும்
　　ஒருகணக்கி லொண்கதிர்கள் கோள்க ளுற்ற
சூழுலக மத்தனையுந் தோன்று மாபோல்
　　தொடர்ந்துவர மிகவெளிதில் தனது தூய
பேழைவயி றடக்கிவரும் பிறப்பை நோக்கிப்
　　பேணுபொரு ளாளனெனும் பிள்ளை யார்தாம்
மேழிவளத் திருக்கோலங் கரையில் மேவும்
　　வீரகத்திப் பிள்ளையென விளங்கக் கண்டேன். (10)

# 3. அருள் நினைந்துருகல்

அரனார் மகனே ஆனை முகனே
ஞானப் பெருஞ்செல்வா
திருவார் உருவே திகழும் நிலவே
தேனின் னமுதோனே
அரிதோ எளிதோ எதுவோ அனைத்துச்
செயற்கும் முதல்வோனே
பெருவாழ் வடியார் புடைசூழ் கோலங்
கரைகொள் பெருமானே. (1)

கருணைக் கதிரே கடலே முகிலே
கதியும் விதியும்நீ
மரணம் வரினும் மனமீ தகலா
மருப்புச் செவிமுக்கண்
அருநற் கரங்கள் ஐந்தோ டிருக்க
அஞ்சேன் அஞ்சேனே
அருணன் விழிக்கும் கோலங் கரைமீ
தமரும் பெருமானே. (2)

பெற்றார் போகப் பிதற்றித் திரிந்த
பேதைப் பருவத்தில்
பொற்றாள் உருவம் காட்டிக் கோயில்
கூட்டிப் போந்தென்னை
நற்றா மரையில் அமுதீந் தாண்ட
நாளை மறவேனே
வற்றா வளநீர் கோலங் கரைவாழ்
மக்கள் பெருமானே. (3)

மார்க்கண் டையர் நின்றாள் மனம்வைத்
　　தியற்றும் மாபூசை
பார்க்கும் படிநீ பலநாட் பணித்தும்
　　பாரா திருந்தேனை
சீர்க்குங் கரத்தால் பிடித்தே யிழுத்துச்
　　சேர்த்தா யணைத்தையா
ஆர்க்கும் வண்டார் கோலங் கரைகொண்
　　டாளும் பெருமானே. (4)

நீரா டியபின் நிகரிற் பூசை
　　கண்டா டிடவைத்தாய்
ஆரா வமுதம் அன்போ டளித்தே
　　ஆற்றல் பெறவைத்தாய்
தேரோ டியபின் திருவீ தியிலே
　　போரா டவும்வைத்தாய்
காரோ டுகதிர் வயல்சூழ் கோலங்
　　கரைகொள் பெருமானே. (5)

உணவும் உடையும் உணர்வும் நடையும்
　　ஒருமித் தளித்தென்னில்
கணமும் விலகாக் கவனக் கருணைக்
　　கண்வைத் துயர்கல்வி
அணியும் நல்கி அடியே னையுமோர்
　　ஆளாக் கியவன்நீ
பிணிதீர் கோலங் கரைகொள் வீர
　　கத்திப் பெருமானே. (6)

கன்னித் தமிழின் கவினார் உயர்வைக்
காணும் படிசெய்தாய்
கன்னற் கவிதைக் கலையை அருளிக்
கவிஞர் அரங்கேற்றிப்
பின்னுக் கிருந்தே முன்னுக் குயரத்
தள்ளிப் பெயர்தந்தாய்
வன்னக் கிளிகள் குலவும் கோலங்
கரைவாழ் பெருமானே. (7)

எழவைப் பவனும் இறுமாப் புறவே
இசைசெய் பவனும்நீ
அழவைப் பவனும் அலமந் ததனால்
அருள்செய் பவனும்நீ
தொழவைப் பவனும் விழவைப் பவனும்
சுகஞ்செய் பவனும்நீ
எழிற்பூ வையர்வாழ் கோலங் கரைகொள்
எங்கள் பெருமானே. (8)

உனக்கும் எனக்கும் இடையில் தடையாய்
உளதாம் பொருளுண்டோ
எனக்கென் றெதுவும் இலையிங் கிருப்பின்
எல்லாம் உனதன்றோ
மனக்கண் மதிக்கண் வினைக்கண் முதலாய்
மலரும் பொருள்நீயே
பனிக்குஞ் சோலைக் கோலங் கரையிற்
பயிலும் பெருமானே. (9)

அல்லும் பகலும் அடியேன் நெஞ்சில்
ஐயா நின்னாமம்
சொல்லிற் செயலில் துயரில் சுகத்தில்
துலங்கும் நின்னாமம்
எல்லாப் பொழுதும் துணைநீ இறைவா
என்னே தவஞ்செய்தேன்
கொல்லா புரியாம் கோலங் கரைகொள்
கொற்றப் பெருமானே. (10)

# 4. திருவழைப்பு

வான ளாவவ ளர்த்துப்ப னைகள்
மோன நீழலில் மூழ்கியி ருக்கும்
ஞான வள்ளலின் நற்றிறம் காணத்
தேனில் நல்லநு ணாவிலிற் சேரீர் ! (1)

நாட்டின் செல்வம்நன் றாகவே யோங்க
வீட்டு முற்றத்தில் செந்நெல்வி ளைத்துக்
காட்டு வான்கமக் காரனைக் காணத்
தேட்டம் மிக்கநு ணாவிலிற் சேரீர் ! (2)

வாணி செல்விவ ணங்கிட வாழும்
மாணெ ழிற்பொய்கை இல்முன்வ குத்துப்
பேணு வீரகத் திப்பிள்ளை யாரைக்
காண வாயிரங் கண்ணுடன் வாரீர் ! (3)

கால்ந டைகளைக் காத்துவ ளர்த்துப்
பால்கு டங்குட மாகப்ப டைக்குஞ்
சால்பு டைப்பண்ணை யாளரைச் சாரின்
மால்கெ டும்மனம் வாழ்வுறும் வாரீர் ! (4)

மாங்க னீபலா மாதுளை தோடை
ஆங்கு நல்விளா அன்னாசி வாழை
தீங்க னிச்சோலைக் காரரின் செந்தாள்
தாங்கி யோங்கநு ணாவிலைச் சாரீர் ! (5)

எள்ளு ருண்டை இலுப்பையின் பாகு
நள்க ருப்பணி பாணிப்ப னாட்டு
வள்ள லுள்ளவன் வார்கழ லின்ப
வெள்ள மின்னும் இனிக்கும் விரைவீர் ! (6)

தென்னை தாகத்தைத் தீர்த்திடப் பக்கல்
புன்னை நீழலும் புத்தெழிற் காற்றும்
மன்னு மற்புத மாமுகன் நல்கும்
இன்ன ருட்கிணை யீடில்லை வாரீர் ! (7)

ஏல வேவர வேற்பதற் கும்மைச்
சாலை யெங்கணுஞ் சோலைக ளாக்கி
மாலை யேந்துபொற் கொன்றைகள் வைத்தார்
கால தாமத மேன்வந்து காணீர் ! (8)

சேவல் வெண்சங்கு சீர்மணி மந்தை
பாவு பூசைகிள் ளைகுயில் பாட்டு
யாவும் விந்தைநு ணாவிலை யண்ணிக்
காவல் வீரவி நாயகர் காணீர் ! (9)

இயற்கை யப்பனை எங்கள் பிரானை
வியற்கு மற்புத மீகரத் தானை
மயக்கு மாவிருள் மாய்க்கவல் லானை
நயக்க வின்பநு ணாவிலை நாடீர் ! (10)

# 5. இடித்துரைப் பதிகம்

சிவபெரு மானின் திருவளர் செல்வன்
தேவர்கள் வணங்கிடும் தெய்வம்
புவியினர் போற்றிப் புன்மைகள் போக்கப்
போந்தவர் கணபதிப் பிள்ளை
குவிகரத் தோடு கூத்துடன் பாடிக்
கும்பிடும் அடியவர் கூடும்
தவநலம் மிக்க நுணாவிலம் பதியில்
தங்கினன் தலைப்படு மனமே. (1)

ஆற்றல்கள் படைத்தோன் அசுரரை அழித்தோன்
அமரரின் அந்தரம் தீர்த்தோன்
நேற்றின்று நாளை என்பதொன் றில்லான்
நித்தியன் நீள்கர வள்ளல்
போற்றியெந் நாளும் புதுமலர் கொண்டு
பூசிக்கும் அடியவர் புடைசூழ்
ஊற்றெழிற் சோலை நுணாவிலம் பதியில்
உள்ளனன் உடன்படு மனமே.

பயிர்களைக் காப்பான் பசுக்களை மேய்ப்பான் (2)
பக்குவம் படிப்படி சேர்ப்பான்
துயர்களைப் போக்கிச் சுகம்பல செய்வான்
சுயதொழி லிவைநுதல் கண்ணன்
செயல்மிகச் சிறக்கத் திருமனத் தோடு
சேவிக்கும் அடியவர் சேரும்
வயல்வெளி மருங்கில் நுணாவிலம் பதியில்
வாழ்பவன் மகிழ்ந்தெழு மனமே. (3)

கனலில்மண் விண்ணில் காற்றினில் நீரில்
கலந்தவள் கடந்தவன் கதியன்
தனித்துவம் வாய்ந்த தண்ணியல் பாளன்
தடக்கரம் ஐந்துடைத் தலைவன்
பனிமலர்க் கண்கள் பருகிடப் பண்கள்
பாடிமெய் யடியவர் பரவும்
புனல்வளப் புதிதார் நுணாவிலம் பதியில்
பொலிபவன் புறப்படு மனமே. (4)

நயவினை நாதன் நால்வகை வேதன்
நல்லறி வாளன்மெய்ஞ் ஞானி
உயர்வினை அளிப்பான் உன்னைவிட் டகலான்
உத்தமன் ஓம்முக வையன்
துயர்கெட மலரும் தூபமுங் கொண்டு
சுந்தர வடியவர் துதிக்கும்
இயலிசை நடமார் நுணாவிலம் பதியில்
இருப்பவன் இசைந்தெழு மனமே. (5)

ஆவியி னினியான் அருமருந் தனையான்
அவமதிப் பியற்றினும் முனியான்
ஏவலும் புரிவான் எங்கெனும் வருவான்
இணையற்ற விநாயக மூர்த்தி
நாவினிக் கநிதம் நாதனைப் பாடி
நைந்துரு கடியவர் நயக்கும்
மேவுநற் புகழார் நுணாவிலம் பதியில்
விளங்கினன் விரும்புவை மனமே. (6)

எத்தனை முறையான் எம்பெருமானின்
இன்னியல் பெடுத்திடித் துரைத்தேன்
புத்தியொன் றிலையோ புன்னெறி வலையோ
பொய்மைகள் போக்குங்க ணேசன்
பத்திசெய் துள்ள பழவினை போக்கிப்
பதம்பெறும் அடியவர் பயிலும்
வித்தைகள் விளங்கும் நுணாவிலம் பதியில்
வீற்றுளன் விரைந்தெழு மனமே. (7)

நித்திரை மயக்கம் போலொரு நிலையோ
நேர்பய னிலையெனும் நினைவோ
வித்தைகள் தருவான் சித்திகள் புரிவான்
விரிசெவி கலைமுடி வேந்தன்
எத்தனை இன்பம் என்னபே ரின்பம்
எனப்புகழ்ந் தடியவர் இறைஞ்சும்
இத்தரை போற்றும் நுணாவிலம் பதியில்
இலங்கினன் இணங்கிடு மனமே. (8)

நன்குனை அறிவான் ஆயினும் நயந்து
நாளுந்தன் னருகணைத் தருள்வான்
வன்கொள்கை யெறிவாய் வாழ்வினைப் பெறுவாய்
வாரணன் மாபெரும் வள்ளல்
இன்கணீர் பெருக இறைஞ்சியி றும்பூ
தெய்துநல் லடியவர் இலங்கும்
உன்கவி னூராம் நுணாவிலம் பதியில்
உறைபவன் ஒருப்படு மனமே. (9)

ஊரிலுள் ளவனை ஒருமுறை பாரா
துலகினை வலம்வரல் முறையோ
பேர்மதி யாளன் பெற்றவர் தம்மைப்
பெரிதென மதித்தவோர் பிள்ளை
நேரினில் அறிந்தோர் நெஞ்சம்நெக் குருகி
நீர்விழி சொரிந்தனு பவிக்கும்
சீரிய நெறியான் நுணாவிலம் பதியில்
சேர்ந்தனன் சேர்ந்திடு மனமே. *(10)*

# 6. மலர்த்தாட் பணிவு

ஆன்றசிவம் சக்தியிணைந் தாளவருந் தேனமுதம்
மூன்றுவிழி நான்குபுயம் ஐந்துகர மூர்த்தியவர்
ஊன்றிவளர் நுணாவிலதன் கோலங்கரை உவந்திருப்பார்
தோன்றுதுணை ஆனைமுகத் தோன்றல்மலர்த் தாள்பணிவாம். (1)

வானவரும் மண்ணவரும் வாழ்வுபெற வந்துதித்தார்
ஈனமுறு கயமுகனை இலங்குகொம்பால் எறிந்துகொன்றார்
மானமிகு நுணாவிலதன் கோலங்கரை மதித்துறைவார்
வானமுத ஆனைமுக வள்ளல்மலர்த் தாள்பணிவாம். (2)

கல்விகலை கருணையெல்லாக் கருமத்தும் முதற்கடவுள்
வல்லயனார் படைப்பதற்கு வழிவகுத்தின் னருள்புரிந்தார்
நல்வினைசெய் நுணாவிலதன் கோலங்கரை நயந்திருப்பார்
அல்லல்கெட ஆனைமுக வையன்மலர்த் தாள்பணிவாம். (3)

முற்றுணரும் முனிவரிவர் மூவுலக மூர்த்தியிவர்
நற்றிருமால் பெற்றகுறை நலிவுறவின் னருள்புரிந்தார்
குற்றமிலா நுணாவிலதன் கோலங்கரை குடியிருப்பார்
கொற்றமிகும் ஆனைமுகக் கோனின்மலர்த் தாள்பணிவாம். (4)

நீதிபுரி வித்தகனார் நிகரிலரும் புத்தியினார்
தாதைசிவன் தேரிறுத்தித் தவறுணர்த்தும் குறும்பிழைத்தார்
பேதமிலா நுணாவிலதன் கோலங்கரை பிரிந்தறியார்
வேதமுதல் ஆனைமுக வேந்தர்மலர்த் தாள்பணிவாம். (5)

உற்றபெரும் போட்டிகளில் வெற்றிபெற உதவிநிற்பார்
பெற்றவரை வந்துவலம் பெறற்கரிய பரிசுபெற்றார்
சொற்றிறம்பா நுணாவிலதன் கோலங்கரை தொடர்ந்திருப்பார்
நெற்றியிற்கண் ணானைமுக நேயர்மலர்த் தாள்பணிவாம். (6)

காதலரைச் சேர்த்துவைக்கும் கருணைமிகு கணபதியார்
ஏதமிலாக் குறமகளை இளவலுடன் இணைத்துவைத்தார்
வேதமொலி நுணாவிலதன் கோலங்கரை மீதுறைவார்
சோதிமலை ஆனைமுகத் தூயர்மலர்த் தாள்பணிவாம். (7)

கவின்மனையார் கல்லடியார் கடும்வெளியார் காடுடையார்
தவமுனிவர் அகத்தியர்தம் தலையிற்குட்டி வணங்கவைத்தார்
புவிபுகழும் நுணாவிலதன் கோலங்கரை பொலிந்திருப்பார்
செவிநனிகூர் ஆனைமுகத் தேவர்மலர்த் தாள்பணிவாம். (8)

செவ்விளநீர் மோதகம்பால் தேன்கரும்பு விரும்பிடுவார்
ஔவையிடம் நான்குபெற்றே அருந்தமிழ்மூன் றளித்துவந்தார்
ஔவியமில் நுணாவிலதன் கோலங்கரை அமர்ந்தருள்வார்
இவ்வியல்பார் ஆனைமுக இறைவன்மலர்த் தாள்பணிவாம். (9)

அந்தமிலார் ஆதியிலார் அண்டவெளி யெங்குமுள்ளார்
அந்தமதில் தம்வயிற்றுள் அனைத்துலகும் அடக்கிவைப்பார்
கந்தவன நுணாவிலதன் கோலங்கரை கனிந்திருப்பார்
மந்திரமாம் ஆனைமுக மன்னர்மலர்த் தாள்பணிவாம். (10)

# 7. திருவணக்கம்

உன்னியழ முன்னருணர்ந் தோடியுடன் வந்துதவும்
அன்னையினும் மிகவிரும்பி அன்புசெய்வார் அரவணைப்பார்
மன்னுமெழில் நுணாவிலதன் கோலங்கரை மகிழ்ந்துறைவார்
தன்னிகரில் விநாயகரைச் சார்ந்துநிதம் வணங்கிடுவாம். (1)

தந்தையினுஞ் சாலவெல்லாந் தந்துதவி யாதரிப்பார்
அந்தமிலா வரந்தருவார் அறிவுநலச் சுகந்தருவார்
செந்தமிழ்வாழ் நுணாவிலதன் கோலங்கரை சிறந்திருப்பார்
விந்தைமிகு விநாயகரை விரும்பியென்றும் வணங்கிடுவாம். (2)

உற்றவுடன் பிறப்பினும்மேல் உறுதுணையா யுடனிருப்பார்
பற்றிலரா மாயினுந்தன் பத்தர்களிற் பற்றுமிக்கார்
கற்றவர்வாழ் நுணாவிலதன் கோலங்கரை களித்திருப்பார்
வெற்றிமிகு விநாயகரை வீழ்ந்துருகி வணங்கிடுவாம். (3)

ஒப்பிலரும் குருவுரைக்கும் உயருரைசெய் குருமணியார்
எப்பொருளும் அவர்முடிபாம் இன்னறிவே யவர்வடிவாம்
வெப்பிலித நுணாவிலதன் கோலங்கரை வீற்றிருப்பார்
மெய்ப்பொருளாம் விநாயகரை மேவிநின்று வணங்கிடுவாம். (4)

உயிர்தருவான் நண்பரினும் உயர்ந்தபெரும் நண்பரிவர்
துயரெதுவும் தோன்றவிடார் தொல்வினையும் ஊன்றவிடார்
வயல்மலிந்த நுணாவிலதன் கோலங்கரை வளர்ந்தொளிர்வார்
செயல்முதல்வர் விநாயகரைச் சேர்ந்துருகி வணங்கிடுவாம். (5)

செறிந்தவின சனத்தவரிற் சிறந்தவரா மிவரடியார்
துறந்தமனந் துலங்குகுணந் தூயவினைத் தொண்டர்களாம்
சிறந்தபதி நுணாவிலதன் கோலங்கரை திகழ்ந்திருப்பார்
நிறைந்தகதி விநாயகரை நெஞ்சிருத்தி வணங்கிடுவாம். (6)

அன்புமிகு மனைவியினும் அதிநெருங்கிப் பணிபுரிவார்
பின்புவரும் பெரியவின்பப் பெரும்பயனை உடனளிப்பார்
இன்பனையூர் நுணாவிலதன் கோலங்கரை எழுந்தருள்வார்
மன்பொருளாம் விநாயகரை வாழ்த்தியென்றும் வணங்கிடுவாம். (7)

கண்கண்ட கணவனினும் கதியளிக்கும் தலைவரிவர்
விண்கண்ட யாவருக்கும் விநாயகராய் விளங்குபவர்
தண்கொண்ட நுணாவிலதன் கோலங்கரை சஞ்சரிப்பார்
திண்ணண்ட விநாயகரைத் தினம்நினைந்து வணங்கிடுவாம். (8)

அறிவறிந்த மக்களினும் அருஞ்செல்வம் இவர்கழல்கள்
முறையறிந்த சிவபெருமான் முத்தமிடும் முதற்பிள்ளை
நெறியறிந்த நுணாவிலதன் கோலங்கரை நிலைத்திருப்பார்
விறல்மிகுந்த விநாயகரை மிகப்பணிந்து வணங்கிடுவாம். (9)

என்னிலும்நல் லினியவராய் இருந்தெனக்குள் இயக்குகின்றார்
சொன்னபடி செய்திடுவார் சுகமளித்துக் காத்தருள்வார்
தென்னைவள நுணாவிலதன் கோலங்கரை திளைத்திருப்பார்
மன்னெழிலார் விநாயகரை மண்டியிட்டு வணங்கிடுவாம். (10)

# 8. திருத்தாளடைவு

மனம்விரும்பிக் கேட்பதெல்லாம் மறுகணமே வழங்கிடுவார்
அனுபவிக்க விட்டுவைப்பார் ஆசைகெடச் செய்துநிற்பார்
புனிதவுள்ள நுணாவிலதன் கோலங்கரை புகழ்ந்துறைவார்
தனிமுதல்வர் தலைப்பிள்ளை தமிழமுதத் தாளடைவாம். (1)

ஆடிமனம் அடக்கமுறும் ஐம்புலனும் அறிவுபெறும்
நாடியுறு பயன்விழையும் நாகரிக வாழ்வளிப்பார்
கோடியெழில் நுணாவிலதன் கோலங்கரை கோயிலுற்றார்
கூடகற்றுங் குணப்பிள்ளை குளிர்ந்தசுகத் தாளடைவாம். (2)

படிப்படியா யுள்ளமதைப் பக்குவஞ்செய் தொளியிடுவார்
உடனடியா யிருளகலும் உள்ளதெல்லாந் தெரியவரும்
அடிமுடியூர் நுணாவிலதன் கோலங்கரை அகமுடையார்
அடியவர்கா முறுபிள்ளை அமைதிதருந் தாளடைவாம். (3.)

என்னபெற்ற உடலுலகம் என்னகண்ட வாழ்க்கையென
உன்னியெழுங் கேள்விகளால் உறுபொருளை யுணரவைப்பார்
தன்னிகரில் நுணாவிலதன் கோலங்கரைத் தலமுடையார்
மன்னுயர்வு தரும்பிள்ளை வசந்தவின்பத் தாளடைவாம். (4)

சுந்தரமா வீடுபல சூழுலகில் இருந்துமென்ன
சொந்தநல வீட்டுணர்வே தொடர்ந்துநெஞ்சில் வளர்த்துநிற்பார்
சிந்தைநல நுணாவிலதன் கோலங்கரைத் திருவிடத்தார்
பந்தமறுத் தருள்பிள்ளை பரமசுகத் தாளடைவாம். (5)

உள்ளதெல்லா மொன்றுமில்லை உறவுமில்லை பகையுமில்லை
உள்ளமுயிர் உலகமெல்லாம் ஓம்பொருளே யொளிமயமாம்
கள்ளமிலா நுணாவிலதன் கோலங்கரைக் கவின்மனையார்
உள்ளமுவந் திவர்பிள்ளை ஓங்குசுகத் தாளடைவாம். (6)

தன்னைமுதல் வெளிப்படுத்தித் தத்துவமும் விளங்கவைப்பார்
அன்னையைப்பின் காட்டி யப்பால் அத்தனையும் அறியவைப்பார்
என்னரிய நுணாவிலதன் கோலங்கரை இருப்புடையார்
துன்னருமா துணைப்பிள்ளை தூங்குகளித் தாளடைவாம். (7)

தவமிலருந் தாமுணர்ந்து தலைப்படமுன் தாங்கியவர்
பவமறுத்துப் பரிசளித்துப் பதமளிக்கும் பரமரிவர்
சிவமயவூர் நுணாவிலதன் கோலங்கரைச் செழும்பதியார்
கவினமுதக் கலைப்பிள்ளை கதியளிக்குந் தாளடைவாம். (8)

இவரடியார்க் குயிரெடுக்கும் இயமனென்னும் இராசனில்லை
அவரருகில் இருக்கையிலே எவர்வருவார் துன்புறவே
குவியடியார் நுணாவிலதன் கோலங்கரை கொலுவிருப்பார்
சிவனடிசேர்த் தருள்பிள்ளை தேமதுரத் தாளடைவாம். (9)

முடிவுவரை துணையிருந்து முத்தியின்ப வீட்டினுள்ளே
குடியிருக்கக் கொண்டுசெல்வார் குனிந்தமரர் வரவேற்பார்
விடிவுதரும் நுணாவிலதன் கோலங்கரை வீடுடையார்
அடியவரின் உயிர்ப்பிள்ளை அறியவொணாத் தாளடைவாம். (10)

# 9. பூங்கழலணிவு

உவகையுடன் விருப்புணர்ந்தின் னுணவுவகை ஊட்டிமிகக்
கவனமுடன் வளர்த்திடுவார் காதலுடன் அணைத்தருள்வார்
சிவநெறிகொள் நுணாவிலதன் கோலங்கரை செறிந்திருப்பார்
தவவிளைவாம் கணபதியார் தாமரைப்பூங் கழலணிவாம். (1)

நல்லகுணம் பண்புயர்ந்த நடத்தையுந்தந் தகமகிழ்வார்
கல்விகலை அறிவுபெறக் கருத்துடனே வழிசமைப்பார்
பல்கலையூர் நுணாவிலதன் கோலங்கரைப் பதியுடையார்
வல்லபெருங் கணபதியார் வடிவுறுபூங் கழலணிவாம். (2)

புத்திசித்தி புத்துணர்வு புகழ்வரிசை புரிந்துபெரும்
வித்தகரின் மத்தியிலே வீற்றிருக்க விரைந்தருள்வார்
சுத்தமன நுணாவிலதன் கோலங்கரை சூழ்ந்திருப்பார்
நித்தியராம் கணபதியார் நெறிதருபூங் கழலணிவாம். (3)

விரும்புதொழில் பார்க்கவைப்பார் வேண்டுபொருள்
[சேர்க்கவைப்பார்
இரும்பனைய வதிபர்களும் சிரம்பணியும் திறனளிப்பார்
கரும்புவளர் நுணாவிலதன் கோலங்கரை காத்துறைவார்
அரும்பொருளாம் கணபதியார் அழகியபூங் கழலணிவாம். (4)

உடன்பிறந்தார் ஆதரவால் உயர்குருமார் அறிவுரையால்
படியுநண்பர் உதவிகளால் பயன்மிகுந்த சுகந்தருவார்
குடியுயரும் நுணாவிலதன் கோலங்கரை குடியிருப்பார்
இடர்களையும் கணபதியார் இன்னரும்பூங் கழலணிவாம். (5)

மனநலமார் மனைவியுடன் மகிழ்ந்திருக்க வருள்புரிவார்
இனநலமும் சேர்த்திடுவார் இல்லறமும் பெருகவைப்பார்
மனைவளமார் நுணாவிலதன் கோலங்கரை வதிந்தொளிர்வார்
வினைமுதல்வர் கணபதியார் வெற்றிகொள்பூங் கழலணிவாம். (6)

அரியநிதி எனத்தமிழர் அன்றுமுதற் போற்றிவரும்
உரியமதி மக்களையும் உவந்தருளும் உத்தமனார்
பெருமைமிகு நுணாவிலதன் கோலங்கரைப் பெருங்குடியார்
திருவிளையும் கணபதியார் தேடரும்பூங் கழலணிவாம். (7)

குறிப்புணரும் இளையவரைக் குறைவிளங்கா முதியவரைப்
பொறுப்புணரும் அலுவலரைப் பொருத்திவைத்துப் புகழ்புரிவார்
சிறப்பறியும் நுணாவிலதன் கோலங்கரை தினமுறைவார்
பிறப்பிறப்பில் கணபதியார் பீடுறுபூங் கழலணிவாம். (8)

பாங்குடனே பழகியபின் பரிசழிக்க நினைப்பவர்கள்
தீங்கிழைக்கக் கருதுபவர் செருக்கனைத்தும் அடக்கிவைப்பார்
மாங்கனியூர் நுணாவிலதன் கோலங்கரை மலர்ந்திருப்பார்
ஓங்குபுகழ் கணபதியார் உறுதுணைப்பூங் கழலணிவாம். (9)

நன்றெனது பிறப்புடலம் நன்றுலகு நல்லதெல்லாம்
என்றினது வாழவைக்கும் இவ்வுலகக் கடவுளிவர்
ஒன்றிவளர் நுணாவிலதன் கோலங்கரை ஊன்றியுளார்
என்றுமுள கணபதியார் இன்றமிழ்ப்பூங் கழலணிவாம். (10)

# 10. பூசனைப் பதிகம்

சந்தன விருக்கை மீது
        சால்புற வமர்ந்தி ருக்கும்
விந்தைவி நாய காநின்
        மேன்மைகொள் மலர்ப்ப தங்கள்
சிந்தையி லிருத்தி யன்பால்
        தினந்தினம் பூசிக் கின்றேன்.
முந்திய தவத்தால் வந்த
        முழுப்பய னுணர்ந்தேன் வாழி. (1)

உன்கருத் துடன்வி ழித்தோம்
        ஓம்கண பதியென் றோதி
மன்கதி ருதிக்க முன்னர்
        மகிழ்வுட னெழுந்து பூதப்
புன்கடன் முடித்து மூழ்கிப்
        புதுமலர் பறித்து வந்தேன்
இன்கர முதலே பூசை
        இயற்றுதற் கருள்வாய் வாழி. (2)

பாலறு குச்சி வைத்துப்
        பலகுடப் பன்னீர் கொண்டு
சாலவும் முழுக வார்த்துச்
        சரிவரப் போக்கி யீரம்
சீலநற் பட்டு டுத்தித்
        திருநலச் சால்வை யிட்டேன்
ஞாலமு மிவ்வா றாக
        நாயகா வருள்வாய் வாழி. (3)

ஐயனே நினக்கென் றன்பா
        யாக்கிய வண்ணச் சுண்ணம்
மெய்யெலா மினிது பூசி
        விளங்கெழில் நீற ணிந்து
செய்யவான் திலக மிட்டுச்
        செஞ்சடை யழகு செய்தேன்
வையமும் இவ்வா றாக
        வள்ளலே யருள்வாய் வாழி. (4)

சவியுறத் தங்க வைரச்
        சங்கிலி தகுமுத் தாரம்
கவினொளி குழைக ழல்பொற்
        காப்பணி வகைய ணிந்து
நவமணி முடித ரித்து
        நறுமலர் மாலை யிட்டேன்
அவனியும் இவ்வா றாக
        வண்ணலே யருள்வாய் வாழி. (5)

படிவுறு தூபம் போட்டுப்
        பலவகைத் தீபங் காட்டிக்
கொடிகுடை யால வட்டம்
        கொலுவுறப் பிடித்துத் தென்றல்
தடவுறு வகையில் மெல்லச்
        சாமரை வீசி நின்றேன்
படியிலும் இவ்வா றாகப்
        பண்ணவா வருள்வாய் வாழி. (6)

கண்ணுதல் மதியே போற்றி
கணங்களின் பதியே போற்றி
விண்ணவர் முதலே போற்றி
விநாயகா போற்றி யென்றென்
றண்ணலே மலர்கொண் டன்பால்
அர்ச்சனை புரிந்து நின்றேன்
மண்ணிலும் இவ்வா றாக
மாமுகா வருள்வாய் வாழி. (7)

பலவகைப் பண்ணி யங்கள்
பாகவல் தேன்க ரும்போ
டலகில்நற் பால்ப ழங்கள்
அரியசெவ் விளநீ ரெல்லாம்
பொலிவுறப் படைத்து நற்றாம்
பூலமுந் தரிக்க வைத்தேன்
உலகமும் இவ்வா றாக
வோம்முகா வருள்வாய் வாழி. (8)

கண்ணினில் நின்னை வைத்துக்
கருத்துடன் கரங்கு வித்துப்
பண்ணுடன் பாடிக் குட்டிப்
பரவிப்பின் சுற்றி வந்து
கண்முனர் கலங்கி வீழ்ந்த
பிள்ளையைக் கண்டு கொண்டு
பண்ணிய பூசை ஏற்க
வேண்டினன் பற்றி வாழி. (9)

முன்பெனை யாண்டு பூசை
முழுவதுங் காண வைத்த
அன்பனே யதனை யேநின்
னருளினால் அகத்திற் செய்தேன்
இன்புறத் தினமும் நீமுன்
னிருந்திதை இயற்ற வைப்பாய்
மன்பதை வாழும் பூசை
மனத்தினிற் புரியின் வாழி. (10)

மாசற மனங்கள் ஆனை
முகமதிப் பெருமா னுக்குப்
பூசனை செய்வோர் வாழி
புரிந்துசெய் விப்போர் வாழி
ஆசையோ டருகில் நின்றப்
பூசைகாண் அடியார் வாழி
பேசரும் நுணாவில் வீரப்
பிள்ளையார் வாழி வாழி. (11)

# 11. திருவுலா வெழுச்சி

ஐயனே பிள்ளையா ரப்பனே எழுக
ஆனைமுகத் தேனமுத வண்ணலே எழுக
செய்யனே கணபதிச் செம்மலே எழுக
திருநுதற் கண்ணுடைய தேவனே எழுக
மெய்யனே விண்ணவர் வேந்தனே எழுக
விக்னேசு வரநாம மேலவா எழுக
துய்யவான் திருக்கோலங் கரைமீது சுடரும்
தோன்றலே சிவசக்திச் சோதியே எழுக ! (1)

கயமுகன் கொடுமைகள் கடிந்தனை எழுக
கண்கண்ட கருணைமா கடவுளே எழுக
அயனவர் படைத்திட வருளினை எழுக
அண்டினார்க் காதார வைங்கரா வெழுக
வியன்மிகு தேர்க்காலை விழுத்தினை எழுக
வெற்றிபெற வழிசெய்யும் நற்றவா எழுக
பயன்மிகு திருக்கோலங் கரைமீது பதிகொள்
பாமரர் பத்தனே முத்தனே எழுக ! (2)

பெற்றவர் உலகென்று கனிபெற்றோய் எழுக
பேர்மதி யாளரின் பிள்ளையே எழுக
உற்றவே லவன்வள்ளிக் குதவினை எழுக
ஒருமனத் திருமணக் குருமணி எழுக
முற்றுணர் அகத்தியர் நற்றுணை எழுக
மோனமார் ஞானவான் முனிவரே எழுக
கற்றுணர் திருக்கோலங் கரைமீது களிக்கும்
கற்பகக் கனியுருக் கலைமணி எழுக ! (3)

தேடரும் திருநீறு குறிமுறை திகழ
செஞ்சாந்து குங்குமம் நுதலிலே யொளிர
ஆடைகள் அடியவர்க் கலங்கார மாக
ஆபரணம் யாவுமிக அழகுறப் பொலிய
சூடுமா முடிமணி தூநில வெறிப்பத்
தோள்புரி நூல்மலர் மாலைகள் துலங்க
கூடிநற் றிருக்கோலங் கரைமீதிற் குலவும்
கூர்மதிப் பிள்ளையரே வீதிகொள வெழுக ! (4)

ஆணவம் அடக்குமங் குசமொரு கரத்தில்
ஆண்டதைப் பிணைக்குவான் கயிறொரு கரத்தில்
வீணரை வீழ்த்துவிறல் கொம்பொரு கரத்தில்
வேலனை வென்றகனி வேறொரு கரத்தில்
பேணுமடி யார்கள்வினை பேதிக்குங் கலசம்
பெருங்கரம் எனஇவை உள்ளபடி பிறங்க
ஆணிலத் திருக்கோலங் கரையமர்ந் தாளும்
ஆனைமுக வையனே போற்றியெழுந் தருள்க ! (5)

தொண்டரின் தோள்களில் துலங்கியெழுந் தருள்க
சுந்தரத் திருக்கோலம் விளங்கவெழுந் தருள்க
கண்டவர் கண்ணெலாம் நிறையவெழுந் தருள்க
கருத்திலே திருத்தமா யுறையவெழுந் தருள்க
அண்டினார் நாவெலாம் ஒலிக்கவெழுந் தருள்க
அடியவர் அன்பிலே குளிக்கவெழுந் தருள்க
தண்டலைத் திருக்கோலங் கரைமீது தரிக்கும்
தடக்கரம் ஐந்துடைய தலைவனே எழுக ! (6)

எங்கணும் கோபுர மணியெதி ரொலிக்க
எல்லோரும் வாயார வரகரா வென்ன
சங்குகள் இடையிடை தனித்தனி ஊத
சார்ந்துசே மக்கலம் தண்ணென விசைப்ப
மங்கலத் தவிற்கூட்டம் மாறியே பேச
மன்னுதே னிசைநாத சுரம்கூட்டி வழங்க
பொங்கெழில் திருக்கோலங் கரைமீது பொலியும்
போற்றுமா களிற்றுமுகப் புண்ணியா வெழுக ! (7)

அடியவர் பெருவண்ணக் குடைபிடித் தார்ப்ப
அணியினில் கொடியால வட்டமிவை தாங்க
படிவுறு சாமரைகள் பக்கலில் வீச
பந்தர்கள் பலதாங்கிப் பக்தர்முன் செல்ல
கடிகமழ் தூபங்கள் கலந்தெங்கும் பரவக்
கற்பூர வொளிமன்னு கதிரோனை வெல்ல
படர்புகழ் திருக்கோலங் கரைமீது பயிலும்
பார்வதி பகர்ந்தநம் பரமே எழுக ! (8)

பையவே பத்தர்பன் னீர்த்தூறல் காண்க
பாமாலை பாடியே பரவுவார் காண்க
துய்யபூ விதழ்மாரி சொரிபவர் காண்க
தொடர்ந்தடி யழிப்பவர் தொகையினைக் காண்க
மெய்யன்பர் புடைசூழ்ந்து வெதும்புதல் காண்க
மேன்மைகொள் காட்சிபெற விரைபவர் காண்க
செய்தவத் திருக்கோலங் கரைமீது திகழும்
சிவகலை தேறலே சிறக்கயா மெழுக ! (9)

கைதலை சேரடி யார்கடல் காண்க
களித்துநீர் மல்கியே கசிபவர் காண்க
மெய்சிலிர்த் தெழவெலாம் விட்டவர் காண்க
விளக்கவொண் ணாவகை வியப்பவர் காண்க
ஐயனே ஆடுவார் பாடுவார் காண்க
ஆவேச நிலையெய்தி அரற்றுவார் காண்க
வையமார் திருக்கோலங் கரைமீது வதியும்
வாரண முகத்தவா வாழ்த்தநா மெழுக ! (10)

கன்றாக வுள்ளவர் கருணையமு தருந்த
கலங்கியே யழுந்துவார் காரணத்தை யறிய
ஒன்றாகி யுள்ளவர் தமிலுன்னைக் காண
உரிமைகொண் டாடுவோர் உறவுமுறை பேண
மன்றாடி வேண்டுவார் மனநிறைவு கொள்ள
மற்றவரும் உற்றவினை தீர்ந்துவள மெய்த
வென்றாளும் திருக்கோலங் கரைமீதி லங்கும்
வீரகத்திப் பிள்ளையரே வீதிவர வெழுக ! (11)

ஊழிவென் றுள்ளதமிழ் ஓங்கிவர வெழுக
ஒன்றுபட்டுச் செந்தமிழ் உழைத்துயர வெழுக
ஈழம்வாழ் மாந்தர்நல வாழ்க்கைபெற வெழுக
எங்குமடி யார்மொழிகள் ஆட்சிசெய வெழுக
ஆழிசூ ழுலகன்பு நெறிதழுவ வெழுக
ஆய்க்கினைகள் தீர்ந்துயிர்கள் அமைதிபெற வெழுக
ஏழிசைத் திருக்கோலங் கரைமீதி லிலங்கும்
எங்கள்குலத் தெய்வமே எழுகவெழுந் தருள்க! (12)

# 12. குருஞானப் புலம்பல்

உலகமெலா முண்டவனே யோம்பொருளாய் நின்றவனே
அலகிலருஞ் சோதியனே யறியவொணா வாதியனே
தவமுனிவர் தேவருயர் தகையடியார் புண்ணியத்தால்
சிவனுமைக்கு மைந்தனென வந்துதித்த திருவுருவே
ஆனைமுக மானவனே அன்புமலர் மேனியனே
ஞானநுதற் கண்மகனே ஐந்துகரப் பண்ணவனே
ஆணவத்தைப் போக்கவல்ல அங்குசமும் நாணையமும்
பேணுமடி யார்பொருட்டுப் பின்கரத்திற் பெற்றவனே
மோதகந்தேன் விளாகரும்பு முக்கனிபா லவலிளநீர்
ஆதியன விரும்பிமிக வமுதுசெய்யு மினியவனே
விக்கினங்கள் தீர்த்தருளும் விநாயகனே கணபதியே
பக்குவமார் பரமசுக வீடுடைய பரம்பொருளே !

கலையுணர்வோ கணியறிவோ காணமுடி யாதவனே
சிலைவடிவோ திருவிழவோ பேணமுடி யாதவனே
சொந்தமென்றோ பந்தமென்றோ சூழவொண்ணாத் தூமணியே
அந்தமிலா நான்மறையு மாளவொண்ணா வதிபதியே
வடிவழகே வளர்கலையே வளஊற்றே யிளங்காற்றே
முடிமணியே மணிமுத்தே முத்தமிழே தமிழரசே
இணையிலுயர் புத்தகமே இன்பசுகத் தத்துவமே
மணமகனே மன்னவனே மழைமுகிலே மலைவளமே
கற்பகமே கண்மணியே கவின்கலையே காவியமே
அற்புதமே அணிகலனே யாரமுதே யெனத்தொடரும்
சொற்பதங்க ளால்விளக்கிச் சொல்லமுடி யாதபெரும்
விற்பனனே வீசுகலை விழுப்பொருளே விநாயகனே !

ஆற்றவொணா வல்லலறுத் தாதரிக்குங் காவலனே
சீற்றமிகு கயமுகனின் செருக்கொழித்த சேவகனே
படைக்குமுறை நான்முகர்க்குப் பரிவுடனே சொன்னவனே
இடைக்குறைமால் நீங்கியெழ விரங்கியமா நன்மையனே
அந்தமிலா வரமளித்தே யகமகிழ்ந்த தன்னிகரில்
தந்தையிவர் தேரிறுத்த தாமரைக்கைச் சின்னவனே
முந்திவலம் வந்துலகைப் பந்தையத்தில் உயர்ந்தவனே
செந்திருப்பூ வள்ளிசெவ்வேள் சேரவழி செய்தவனே
காகமென வந்துகுறு முனிவருடன் களித்தவனே
ஆகுதிருக் கயிலைதனை ஔவையன்புக் களித்தவனே
ஊழியுற வுலகையெலாம் உவப்புடனே கருதரிய
பேழைவயிற் ராலடக்கிப் பேணவல்ல பெரியவனே ! 36

கல்வியினால் நன்னடையாற் கருணையினால் நீதியினால்
நல்வினையாற் பத்தியினால் நாடுபுகழ் ஆன்றவர்கள்
வாழ்வதனால் வையகத்தில் வானுலகம் போல்விளங்கி
யாழ்மகளின் பண்பமைதிக் கணிபுரியும் நுணாவினிலே
தென்னைபனை புன்னைபலா தேக்கிலுப்பை மாமருது
பொன்னிழலால் நுணாவைபுளி பூவரசு கொன்றைகொய்யா
வென்னுமிவை தாம்வளர்ந்தே யியற்கையெழிற் சோலைதரும்
மன்னுபுகழ் கோலங்கரை மலிவளமா வான்பதியில்
பூவையர்வாழ் புனிதநலப் பூக்குளத்தோ டிலங்கியெங்கும்
மேவிவளர் மருதநில மேன்மைமிகு மருங்கினிலே
வீரகத்தி வளவினிலே மிகவிரும்பி வீற்றிருக்கும்
பேரகத்துப் பெருமகனே பீடுமிகு பிள்ளையரே ! 48

முற்பிறப்பிற் செய்ததவ முழுப்பயனா லிப்பிறப்பிற்
கற்பதித்துப் பூசைசெய்து களித்துவந்த கவின்மனத்து
விளையாட்டுச் சிறுவருக்கு விளங்குவண்ணம் வியனுருவம்
வெளிக்காட்டி யாவரையும் வியக்கவைத்த மேலவனே
கோயிலுக்குள் நள்ளிரவில் நுழைந்தவனைக் கொண்டுசென்ற
வாயினிக்கும் கதலியிடை வழிவழியே விழவருளிக்
காலையிலே யவன்நடந்த பாதைதனைக் காட்டியுடன்
சோலியின்றிப் பிடிக்கவைத்துத் துயர்துடைத்த சுந்தரனே
கட்டுக்குக் கார்த்திகேயர் கடிவாய்க்குக் காசிப்பிள்ளை
மட்டற்ற கண்ணோய்க்கு மதிவாணர் கணபதியார்
எனவீழ மேத்திவரும் இவர்மூலம் நின்னடியார்
கனநோய்கள் கருணைகொண்டு கடிதினிலே மாற்றியவா ? 60

பருவமழை பெய்திடவும் பயிர்வகைநன் குய்திடவும்
அருள்பொழிந்து நுணாவிலதன் அகங்குளிரக் களிப்பவனே
மறந்துவிடும் அடியவரின் மாடுகன்றை மறைத்தவரைப்
பறந்துவரப் பணித்தரிய புதுமைகளைப் படைப்பவனே
பொன்மண்பெண் பூசலின்றிப் பொறுப்புடனின் புகழ்பரவும்
அன்பர்நல வாழ்க்கைபதன் அடிமுடியா யமைபவனே
இதமுடனே சரிசமமாய் எல்லவரும் ஏத்தநின்றன்
கதவுகளைத் திறந்தபெருங் கருணைமிகு கரிசனனே
ஆண்டுபல விழாக்களின்றி அடக்கமுடன் மோனநிலை
பூண்டிருந்து பத்தரிடம் புத்துணர்வைத் தூண்டியவா
மூண்டபெருங் காதலினால் முன்விழுந்து கண்சொரிந்து
வேண்டுமன்பர் வல்வினைகள் வீழ்த்துமெங்கள் விநாயகரே ! 72

அன்படக்கம் அறிவுநலம் ஆற்றல்வளம் ஏற்றவுயர்
பண்பியல்பு பரந்தமனம் பக்குவத்தார் நடையமைதி
தென்புடனே சிக்கல்களைத் தீர்க்கவல்ல சிறப்புறுதி
என்பினையு மீயவல்ல இரக்ககுணக் கொடைப்பரிசு
புல்லரையும் பணியவைத்துப் புதுக்கவல்ல புன்முறுவல்
அல்லலெல்லா மறுத்தினிதே யாதரிக்கு மன்புமொழி
நீங்கலில்லா நீறுகொண்ட நெற்றியிலே நிறைமதிபோல்
ஓங்கியொளிர் சந்தனத்தால் உள்ளமெலாங் கொள்ளைகொண்டே
ஊரவருக் குழைத்துவந்தார், ஒப்பரிய குலக்கடவுள்
வீரபத்தி ரர்க்கடிமை பூண்டபெரும் வீறுடையார்
உடன்பிறந்தார் உயிர்கலந்தார் உயர்ந்ததுணை மார்க்கண்டர்
வடிவில்வந்து வையகத்தில் வாழ்வளித்த வல்லவனே ! 84

போர்வையினா லுனைமறைத்துப் போந்தென்முன் னவனுருவில்
பார்வையினா லுளங்கவர்ந்து பலவுதவி நனிபுரிந்து
சின்னவெனை மிகப்பரிந்து வளர்த்தெடுத்துத் திறன்சொரிந்து
கன்னற்கவி பாடவைத்துக் களிப்புறுமா கவியரசே
கொண்டதிருப் பெருங்கோலக் குருவடிவைக் குலக்கொழுந்தைக்
கண்டுகண்டு யான்களித்த கண்ணிறைந்த கவினுருவைக்
கொண்டுசென்ற தென்னவென்ன குலுங்கியழ வைத்ததென்ன
அண்டமெலாம் இருண்டதென்ன ஆழ்துயரந் திரண்டதென்ன
நெய்முடிய முன்னரிய நேர்விளக்கு நூர்ந்ததென்ன
கைகொடுத்த கொழுகொம்பு கடுகதியிற் சாய்ந்ததென்ன
செய்தபிழை யேதறியேன் திருவருளின் புதிர்புரியேன்
பொய்களையும் கோலங்கரைப் பிள்ளையரே பொறுத்தருள்வீர்! 96

கல்விகலை தந்ததென்ன பல்புகழால் வந்ததென்ன
செல்வநிலை பூத்ததென்ன திகழ்பதவி சேர்த்ததென்ன
ஒன்றுமில்லை யொன்றுமில்லை யுள்ளகடைக் கணக்கதிலே
ஒன்றுமிச்சம் உணர்ந்துகொண்டேன் ஓம்பொருளே சரணடைந்தேன்
அண்டவெளிச் சூரியரும் அண்டியுள்ள சந்திரரும்
கொண்டதெலாம் நின்பொருளே கோருவதும் நின்னருளே
மாநிலமும் வானுலகும் வாழ்த்துவது நின்பதமே
தேனமுதும் திரவியமும் செந்தழிழும் நின்பதமே
ஆக்கவினை நாயகனே அதிமதுரத் தேனவனே
காக்கவெனைக் கோலங்கரைக் கவின்பதிவாழ் கணபதியே
ஊருமில்லைப் பேருமில்லை யாருமில்லை யினியெனக்குன்
னோர்திருவான் குருவடிவே உள்ளமெல்லாம் உலகமெல்லாம்! 108

—ஃ—